# பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

## "உன்னை
## மிகவும்
## திரளாய்
## பெருகப்பண்ணுவேன்."

ஆதி –17:2

செய்தி மலர்
2025
ஜனவரி

இதழ் : 22
மலர் : 21



## சபை ஊழியரின் அன்பு மடல்



# 2025–வருடம் நம் சபைக்கு கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தம்

## " உன்னை மிகவும் திரளாய் பெருகப்பண்ணுவேன் "

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான அன்பு சகோதர சகோதரிகளே, உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அன்பின் வாழ்த்துக்களையும், ஆசீர்வாதங்களையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கடந்த டிசம்பர் மாதம் முழுவதும் நம்மை பாதுகாத்து வழி நடத்தின தேவன் வரும் புதிய வருடம் 2025 ஜனவரி மாதத்திலும் நம்மை கிருபையாய் வழி நடத்துவாராக.

ஆபிரகாமுக்கு 99 வயதான போது கர்த்தர் ஆபிரகாமுக்கு தரிசனமாகி நான் சர்வ வல்லமையுள்ள தேவன் நீ எனக்கு முன்பாக நடந்துகொண்டு உத்தமனாய் இரு. நான் உனக்கும் எனக்கும் நடுவாக என் உடன்படிக்கையை ஏற்படுத்தி உன்னை மிகவும் திரளாய் பெருகப்பண்ணுவேன் என்றார். (ஆதி–17:12,2).

ஆம் பிரியமானவர்களே, நாமும் உத்தமமாய் ஆண்டவரைப் பின்பற்றும் பொழுது இந்த புதிய வருஷத்தில் மேற்சொன்ன ஆசீர்வாதங்களை நிச்சயமாகவே சுதந்தரித்துக்கொள்ளுவோம் என்பதிலே எந்தவிதமான சந்தேகமுமில்லை. இதோடு கூட மேலும் கீழ்க்கண்ட பல ஆசீர்வாதங்களையும் ஆபிரகாம் சுதந்தரித்துக்கொண்டான், அவன் திரளான ஜாதிகளுக்கு தலைவனானான், மிகவும் அதிகமாய் பலுகிப்பெருகினான், அவன் சந்ததியில் ராஜாக்கள் தோன்றினார்கள்.

ஆகவே ஆண்டவருக்கு முன்பாக உத்தமமாய் வாழ வேண்டியது மிகவும் அவசியம். வேதம் கூறுகிறது "உமக்கு பயந்தவர்களுக்கும் மனு புத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும் நீர் உண்டு பண்ணி வைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது" என்று (சங்கீ–31:19).

ஆபிரகாமைப் போலவே உத்தமமாய் ஆண்டவரைப் பின்பற்றி பெருக்கமடைந்த சிலரைக்குறித்து கீழ் வரும் பகுதிகளில் நாம் பார்க்கலாம்.

## 1. யோபு...

யோபுவைக்குறித்து ஆண்டவர் கொடுத்த சாட்சி "என் தாசனாகிய யோபு உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவன், அவனைப் போல பூமியில் ஒருவனுமில்லை" என்றார். (யோபு–1:8).

பிரியமானவர்களே, யோபுவின் வாழ்க்கையில் எத்தனையோ சோதனைகளை பிசாசு கொண்டுவந்தான். அவன் சொத்து சுதந்தரங்கள் அழிந்து ஆடுகளும், வேலையாட்களும் சுட்டெரிக்கப்பட்டார்கள். கொள்ளையர்கள் அவன் சொத்துக்களை அபகரித்துக்கொண்டார்கள். அவன் பிள்ளைகள் மரித்துப்போனார்கள். இவையெல்லாவற்றிலும் யோபு பாவம் செய்யவில்லை. தேவனைப் பற்றி குறை சொல்லவுமில்லை. அவன் சொன்னான் "நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன். நிர்வாணியாய் அவ்விடத்திற்கு திரும்புவேன். கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார். கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்" (யோபு–1:21,22) என்று. அவனுடைய நண்பர்கள் எல்லோரும் அவனுக்கு விரோதமாய் பேசி அவன் மனதை நோகடித்தார்கள் என்றாலும் யோபு சொன்னான் "தேவன் கையிலே நன்மையை பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ? என்று, இவைகள் எல்லாவற்றிலும் தன் உதடுகளினால் பாவம் செய்யவில்லை (யோபு–2:10) அதனால் கர்த்தர் மனமிரங்கினார். என் தாசனாகிய யோபு பேசினது போல் நீங்கள் என்னைக்குறித்து நிதானமாய் பேசவில்லை என்று நண்பர்களை கடிந்து கொண்டார். கர்த்தர் யோபுவின் முகத்தை பார்த்தார்.

கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபுவுக்கு முன்னிருந்த எல்லாவற்றையும் பார்க்கிலும் இரண்டைத்தனையாய் கர்த்தர் அவனுக்கு தந்தருளினார். யோபு 140 வருடம் உயிரோடிருந்து 4 தலைமுறையாக தன் பிள்ளைகளையும் தன் பிள்ளைகளுடைய பிள்ளைகளையும் கண்டான். யோபு நெடுநாளிருந்து பூரண வயதுள்ளவனாயிருந்து மரித்தான் (யோபு–42:7–17)ஆம் பிரியமானவர்களே, நாமும் கூட யோபுவைப் போல

எல்லா சூழ்நிலையிலும் கர்த்தரை உத்தமுமாய் பின் பற்றும் போது நம்மையும் கூட கர்த்தர் மிகவும் திரளாய் பெருகப்பண்ணுவார்.

## 2. யோசபாத்...

யோசபாத் என்ற யூத அரசன் உத்தமமாய் கர்த்தரை பின்பற்றினான். யூதாவின் ஒவ்வொரு பட்டணத்திலும் நியாதிபதிகளை நியமித்து ஜனங்களை நோக்கி "நீங்கள் கர்த்தருடைய கட்டளையினால் நியாயம் விசாரிக்கிறீர்கள் கர்த்தருக்கு பயப்படுகிற பயம் உங்களிடத்தில் இருக்கக்கடவது. நீங்கள் உண்மையோடும், உத்தம இருதயத்தோடும் நடந்து கொள்ள வேண்டும். பிரமாணத்திற்கும் கட்டளைகளுக்கும் நியாங்களுக்கும் எச்சரிக்கையாயிருங்கள். நீங்கள் திடமனதாயிருந்து காரியங்களை நடத்துங்கள். உத்தமனுக்கு கர்த்தர் துணை" என்றான். (2-நாளா-19:7-11). இப்படி யோசபாத் உத்தமும், உண்மையுமாய் ஆண்டவரை பின்பற்றியதால் இதற்கு பின்பு மோவாப் புத்திரரும், அம்மோன் புத்திரரும், சேயீர் மலைப்புத்திரரும் ஒன்றாக சேர்ந்து யோசபாத்தையும் யூத ஜனங்களையும் அழிக்க வந்தபோது அவன் கர்த்தரை தேடினான். கர்த்தரை நம்புங்கள் அப்பொழுது நிலைப்படுவீர்கள் அவருடைய தீர்க்கதரிசிகளை நம்புங்கள் அப்பொழுது சித்தி பெறுவீர்கள் என்று சொல்லி பரிசுத்த தேவனை துதிக்கவும் அவரைப் போற்றவும் பாடகர்களை நியமித்தான். அவர்கள் கர்த்தரை துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது என்று துதித்தபோது அம்மோன் புத்திரரையும், மோவாப் புத்திரரையும், சேயீர் மலைப்புத்திரரையும் ஒருவருக்கு விரோதமாய் எழும்பப்பண்ணி அவர்கள் வெட்டுண்டு விழுந்தார்கள். ஆனால் யூத ஜனங்களோ பலுகிப் பெருகினார்கள். யோசபாத்தின் ராஜ்ஜிய பாரம் அமரிக்கையாயிருந்தது.

ஆம் பிரியமானவர்களே, யோசபாத்தை போல கர்த்தரை உண்மையும் உத்தமுமாய் பின்பற்றி துதி ஸ்தோத்திரங்களோடு வாழும்பொழுது நம்மை அழிக்க நினைக்கிறவர்கள் அழிந்தே போவார்கள் நாமோ அனுதினமும் பலுகிப்பெருகுவோம். அல்லேலூயா.

## 3. தாவீது...

தாவீது எப்படி வரவர விருத்தியடைந்தானோ? சேனைகளின் தேவனாகிய கர்த்தர் அவனோடே கூட இருந்தாரோ? அதே விதமாய் நம்மோடும் இருந்து நம்மையும் விருத்தியடையச் செய்வார் (2-சாமு-5:10). சவுல் தாவீதை பொறாமையினால் எத்தனையோ முறை கொல்லப்பார்த்தான். ஆனால் கர்த்தர் தாவீதோடு கூட இருந்ததினாலே அவன் உயிரைப் பாதுகாத்து அதிகமதிகமாய் பலுகி பெருகவும் செய்தார்.அதனால்தான் அவன் எழுதினான் "என் சத்துருக்களுக்கு முன்பாக எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர். என் பாத்திரம் நிரம்பி வழிகிறது" (சங்கீ-23:5) என்று.

## 4. ஈசாக்கு...

ஈசாக்கு அந்த தேசத்திலே விதை விதைத்தான். கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் 100 மடங்கு பலனடைந்தான். அவன் ஐசுவரியவானாகி வரவர விருத்தியடைந்து மகா பெரியவனானான். அவன் வெட்டிய துரவுகளில் எல்லாம் சுரக்கும் நீரூற்றைக்கண்டார்கள். இது தேவனுடைய செயல். அவன் அந்த நீரூற்றுகளுக்கு ரெகொபோத் என்று பெயரிட்டான். இப்படியாக கர்த்தர் நமக்கும் ஜீவ நீரூற்று சுரக்கிற ரெகொபோத்துகளை கொடுத்து ஆசீர்வதித்து மிகவும் பெருகப்பண்ணுவார். (ஆதி-26:12-24). தன் தகப்பனாகிய ஆபிரகாமின் விரோதிகள் ஈசாக்கை எப்படியாவது அழித்து விடவேண்டுமென்று அவன் வெட்டிய துரவுகளை தூர்த்து போட்டார்கள். ஆனால் கர்த்தர் ஈசாக்கோடு இருந்து அவனை மேன்மேலும் வர்த்திக்கப்பண்ணினார். அதே தேவன் நாமும் உத்தம இருயத்தோடும் உண்மையான விசுவாசத்தோடும் அவரை நோக்கி பார்க்கும்பொழுது நம்மையும் வெட்கமடையாமல் மிகவும் திரளாய் பெருகப்பண்ணுவார்.

## 5.இயேசு கிறிஸ்து...

ஏசாயா தீர்க்கதரிசி இயேசுவைக் குறித்து சொன்ன தீர்க்க தரிசனம் "நாம் எல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பி திரிந்து அவனவன் தன்தன் வழியிலோ போனோம் கர்த்தரோ நம் எல்லாருடைய அக்கிரமத்தையும் இயேசுவின் மேல் விழப்பண்ணினார். அவர் கொடுமை செய்யவில்லை அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை. தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போல தம்முடைய வாயைத் திறவாமால் இருந்து சிலுவை மரணத்தை ஏற்றுக்கொண்டார். ஆனாலும் அவர் தமது சந்ததியைக் கண்டு நீடித்த நாளாயிருப்பார். அநேகரை நீதிமான்களாக்குவார். அநேகரை அவர் பங்காக எடுத்துக்கொண்டு, பலவான்களை தமக்கு கொள்ளையாக பங்கிட்டுக்கொள்வார், அவரின் வம்சத்தை யாராலே சொல்லி முடியும்."(ஏசாயா-53 அதிகாரம்).

இயேசு சொன்னார் "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்பொழுது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன்" (யோவா-12:32) என்று. சங்கீதக்காரனாகிய தாவீது தீர்க்கதரிசனமாக சொன்னான், "உமது பராக்கிரமத்தின் நாளிலே உம்முடைய ஜனங்கள் மனப்பூர்வமும் பரிசுத்த அலங்காரமுள்ளவர்களாயிருப்பார்கள். விடியற்காலத்து கர்ப்பத்தின் பிறக்கும் பனிக்கு சமானமாய் உம்முடைய யௌவன ஜனம் உமக்குப் பிறக்கும்" என்று (சங்கீ-110:3)என்று. இப்படியாக மேற்சொன்ன தீாக்கதரிசனங்களின் படி கோடானு கோடி ஆத்துமாக்கள் இன்றைக்கும் இயேசுவின் பிள்ளைகளாக தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள். அல்லேலூயா.

# 6. ஆதி அப்போஸ்தலர்கள்...

இயேசு பரமேறி சென்ற பிறகு சீஷர்களும் விசுவாசிகளும் உத்தமுமாய் ஆண்டவரை பிரசித்தப்படுத்தினார்கள். பேதுருவின் ஒரே பிரசங்கத்தில் ஒருமுறை 3000 பேரும் வெறொரு முறை 5000 பேரும் கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட்டார்கள். விசுவாசிகள் எல்லோரும் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோன்யத்திலும், அப்பம் பிக்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய் தரித்திருந்தார்கள். அநேக அற்புதங்களும் அடையாளங்களும் நடந்தது. விசுவாசிகள் எல்லாரும் ஒருமித்திருந்து சகலத்தையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள். காணியாட்சிகளையும் ஆஸ்திகளையும் விற்று ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்கு தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள். அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அனுதினமும் தரித்திருந்து வீடுகள் தோறும் அப்பம் பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணி தேவனைத் துதித்து ஜனங்கள் எல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார். (அப்-2:41-47).

நம்முடைய சபைக்கும் இதே ஆசீர்வாதத்தை வரும் ஆண்டிலே தருவார். கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால் "இதோ நான் யாக்கோபுடைய கூடாரங்களின் சிறையிருப்பை திருப்பி அதன் வாசஸ்தலங்களுக்கு இரக்கம் செய்வேன். நகரம் தன் மண் மேட்டின் மேல் கட்டப்பட்டு அரமனை முன் போல நிலைப்படும். அவைகளிலிருந்து ஸ்தோத்திரமும் ஆடல் பாடலின் சத்தமும் புறப்படும். அவர்களை வர்த்திக்கப்பண்ணுவேன். அவர்கள் குறுகிப் போவதில்லை. அவர்களை மகிமைப்படுத்துவேன். அவர்கள் சிறுமைப்படுவதில்லை. அவர்கள் பிள்ளைகள் முன் போல் இருப்பார்கள். அவர்கள் சபை எனக்கு முன்பாக திடப்படும். அவர்களை ஒடுக்கினயாவரையும் தண்டிப்பேன். நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள். நான் உங்கள் தேவனாயிருப்பேன்" (எரேமி-30:18-22). நாமும் கூட ஆதி அப்போஸ்தலரைப் போல உபதேசத்திலும், அந்நியோனத்திலும், அப்பம் பிட்குதலிலும் ஜெபம் பண்ணுதலிலும் உத்தமுமாய் தரித்திருப்போம். அப்பொழுது மிகவும் திரளான பெருக்கத்தை ஆண்டவர் நம் சபைக்கு தருவார்.

கர்த்தர் தாமே உங்களோடிருந்து 2025-வருடம் முழுவதும் மிகுந்த கிருபைகளினாலே நிறைத்து மிகவும் திரளாய் பெருகப்பண்ணுவாராக.

கர்த்தரின் பணியில்,

உங்கள் அன்பு சகோதரன்,
சபை முதன்மை ஊழியர்.
S.ஸ்டாலின்.

## தேவ செய்தி

# "உன்னை மிகவும் திரளாய்ப் பெருகபண்ணுவேன்"

கிறிஸ்துவுக்குள் பிரியமான அகமதி தமிழ் திருச்சபையின் குடும்பத்திற்கு இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே அன்பின் வாழ்த்துக்கள்.

இந்த 2025 ஆம் ஆண்டில் கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து நீங்கள் நினைத்துக்கொண்டிருக்கிற நினைவுகளையும் வேண்டிக்கொண்டிருக்கிற வேண்டுதல்களையும் கர்த்தர் நிறைவேற்றுவார். புதிய ஆண்டில் கர்த்தர் உங்களை எல்லா விதத்திலும் ஆசீர்வதித்து நடத்துவாராக. கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே 2025–ஆம் புத்தாண்டு வாக்குதத்தமாக கர்த்தர் கொடுத்த வசனம் ஆதி–17:2.

"நான் உனக்கும் எனக்கும் நடுவாக என் உடன்படிக்கையை ஏற்படுத்தி உன்னை மிகவும் திரளாய் பெருகப்பண்ணுவேன்" என்றார்.

கிறிஸ்துவுக்குள் பிரியமான அன்பு சகோதர சகோதரிகளே நம்முடைய வாழ்க்கையில் பல வேளைகளில் ஒரு பெருக்கத்தை எதிர்பார்க்கிறோம். ஆசீர்வாதத்தில் ஒரு பெருக்கம் வேலை ஸ்தலங்களில் (உயர்வு) மற்றும் வாழ்க்கையில் பல காரியங்களில் பெருக்கத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அனேக விசுவாசிகளுடைய ஜெபம் யாபேசின் எல்லைகளை விரிவாக்கினது போல என்னுடைய ஆசீர்வாதத்தின் எல்லைகளையும் நன்மைகளின் எல்லைகளையும் கிருபைகளின் எல்லைகளையும் விரிவாக்க வேண்டும் என்று ஜெபித்துக்கொண்டிருக்கிறோம். கர்த்தர் ஒருவரே நமக்கு பெருக்கத்தையும், விரிவாக்கத்தையும் தரவல்லவராக இருக்கிறார். உங்கள் ஊக்கமான ஜெபங்களும் வேண்டுதல்களும் நிச்சமாய் நிறைவேறும்.

## 1. உடன்படிக்கை...

இந்த புதிய ஆண்டில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உங்களோடு கூட ஏற்படுத்துகிற உடன்படிக்கை என்னவென்றால் உன்னை மிகவும் திரளாய் பெருகப்பண்ணுவேன். கர்த்தர் நம்மோடு கூட ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்துவார் என்றால் அதை கர்த்தர் நிறைவேற்றுவதில் மிகவும் கவனம் உள்ளவராயும் உறுதியுள்ளவராயும் இருப்பார். நம்முடைய தேவன் வாக்கு மாறாதவர் வாக்குகள் நிறைந்தவர். உடன்படிக்கையிலிருந்து பின்வாங்க

நம்மோடு ஏற்படுத்தியிருப்பார்கள். அதில் பின்வாங்கி போயிருப்பார்கள். கர்த்தர் அப்படி செய்கிறவரல்ல. மனிதர்களாகிய நாம் கர்த்தரோடு கூட ஏற்படுத்துகிற உடன்படிக்கையிலிருந்து பின்மாற்றம் அடையக்கூடும். கர்த்தர் நமக்காய் உறுதியாய் நிற்கிற தேவன்.சங்கீ-89:34-ன் படி நீ உடன்படிக்கையை மீறாமலும் என் உதடுகள் விளம்பினதை மாற்றாமலும் இருப்பேன். சங்கீ-89:28-ன்படி என் கிருபையை என்றென்றைக்கும் அவனுக்காக காப்பேன். என் உடன்படிக்கை அவனுக்காக உறுதிபடுத்தப்படும். இந்த 2 வசனங்களும் கர்த்தர் தாம் ஏற்படுத்துகிற உடன்படிக்கையில் எவ்வளவு உறுதியாய் இருக்கிறார் என்பதை நமக்கு காண்பிக்கிறது.

ஆகவே இந்த புதிய ஆண்டில் கர்த்தரோடு கூட உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். அந்த உடன்படிக்கை கர்த்தருடைய சமூகத்தில் காத்திருப்பது. கர்த்தருடைய வார்த்தையை தியானிப்பது, ஜெபத்தில் தரித்திருப்பது, கர்த்தர் மீது அவரின் வார்த்தையின் மீது நாமத்தின் மீது வைக்கிற விசுவாசத்திலிருந்து தளர்ந்து போகாமல் பின்மாற்றம் அடையாமல் உறுதியாய் நிற்பேன் என்ற உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொள்ளும்போது உறுதியாய் இருக்கும்போது நிச்சயமாய் கர்த்தர் புதிய வருடத்தில் மிகவும் திரளாய் பெருகப்பண்ண வல்லவராயிருக்கிறார்.

## 2. மிகவும் திரளாய்...

ஆபிராம் 99 வயதானபோது கர்த்தர் ஆபிராமுக்கு தரிசனமாகி ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்துகிறார். நம்முடைய வாழ்க்கையில் நம்பிக்கையில்லாத சூழ்நிலைகள் கைவிடப்பட்ட சூழ்நிலைகள் இருக்கலாம். ஆனால் நம் தேவன் இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்களையும், அதிசயங்களையும், செய்ய வல்லவராயிருக்கிறார்.

கர்த்தர் ஆபிராமை நோக்கி பேசின வார்த்தை மிகவும் திரளாய் என்று ஆனால் ஆபிராமுடைய சூழ்நிலையோ ஒரு பிள்ளையைக்கூட பெற்றுக்கொள்ள முடியாத அசாத்தியமான நிலமை. ஆபிராமுக்கும் சாராய்க்கும் சரீரத்தில் பெலனில்லை.பிள்ளை பெறுவதற்கு சாத்தியமில்லை. ஆனால் கர்த்தர் நம்முடைய வாழ்க்கையிலிருக்கிற அசாத்தியங்களை சாத்தியமாக மாற்றுகிற தேவன். ஆபிராமினுடைய கண்ணோட்டமும் சாராயினுடைய கண்ணோட்டமும் அவர்களை சுற்றி இருந்தவர்களுடைய கண்ணோட்டமும் பிள்ளை பெறுவது என்பது முடியாத ஒன்று ஆனால் கர்த்தருடைய பார்வையோ ஆபிராமின சந்ததியை மிகவும் திரளாய் பார்த்தார். ஏசாயா-55:8-ன் படி "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல உங்கள்

வழிகள் என் வழிகள் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்" என்று. நாம் நம்மீது வைத்திருக்கிற நினைவுகளை பார்க்கிலும் கர்த்தர் நம்மீது மேலான நினைவுகளை வைத்திருக்கிறார். நம்முடைய வாழ்க்கையில் முடிந்தது என்று இருக்கிறேன் ஆனால் சூழ்நிலையை மாற்றி கர்த்தர் ஒரு புதிய ஆரம்பத்தை தரவல்லவராயிருக்கிறார். அந்த ஆரம்பம் மிகவும் திரளான ஆசீர்வாதமாயிருக்கும்.

ஆகவே நம்முடைய வாழ்க்கையிலிருக்கிற அசாத்தியமான காரியங்களை கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுக்கும்போது கர்த்தர் தமது அநாதி தீர்மானத்தின்படி நம்மை ஆசீர்வதிக்க வல்லவராயிருக்கிறார்.

## 3. பெருகப்பண்ணுவேன்...

இந்த புதிய ஆண்டில் கர்த்தர் ஒரு பெருக்கத்தை தரவல்லவராயிருக்கிறார். கர்த்தருடைய வார்த்தையை சார்ந்து வாழும்பொழுது வாக்குத்தத்தங்களின் மீது விசுவாசத்தை வைக்கும் போது நமக்கு நிச்சயமாக ஆசீர்வாதத்தில் ஒரு பெருக்கமுண்டு. கர்த்தர் கொடுக்கிற இந்த ஆசீர்வாத பெருக்கம் நித்தியநித்திய காலமாய் நிலைத்திருக்கும். கர்த்தர் ஆபிராமை ஆபிரகாமாய் மாற்றி கொடுத்த வாக்குத் தத்தங்களை நேர்த்தியாய் நிறைவேற்றினார்.

அதுபோல நம்முடைய வாழ்க்கையிலும் கர்த்தர் கொடுத்த, கொடுக்கப்போகிற வாக்குத்தத்தங்களை நிறைவேற்றி ஒரு பெருக்கமான ஆசீர்வாதத்தை இந்த ஆண்டிலும் இனி வரப்போகிற ஆண்டுகளிலும் கொடுத்து நிறைவேற்றுவாராக. கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து வழி நடத்துவாராக. எபி–6:14 நிச்சயமாகவே நான் உன்னை ஆசீாவதிக்கவே ஆசீர்வதித்து உன்னை பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றார். ஆமென்.

இப்படிக்கு,
கர்த்தரின் பணியில்,
**பாஸ்டர் நைஜல் சாலமோன்**
எல்ரோயி ஊழியங்கள்.

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

" உன் பேரை பெருமைப்படுத்துவேன்
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் " ( ஆதி-12:2 )

சகோதரி. ஜெனிஷா ஜான் கெஸ்டன்
சகோ.ஜெகன்
செல்வன்.மிகாயேல் சத்தீஷ்
செல்வன்.ஆல்வின் டேவிட் மணிராஜ்
சகோ.சகாய டார்வின்
செல்வி.ரேச்சல் ஜாய்லன் சாமுவேல்
செல்வி.ஷாரோன் ஜெனிபர்
சகோ.யேசுதாஸ் ஆரோக்கியதாஸ்
சகோ. R.நக்கீரன்
செல்வன்.ஜெய்ரஸ் பால்
சகோதரி.ஆஷாதேவி பிரெட்சிலின்
செல்வன்.ஜோஷன் ஜீவா ஜீவல்சிங்
சகோதரி.ஜென்னட் யேசுதாஸ் ஆரோக்கியதாஸ்
சகோ.சுபின் சிங்
சகோதரி.பிரின்சி கமலதாசன்

சகோதரி.சுனிதா சுந்தர்ராஜ்
செல்வன் ஜான் லெவின் ஜான் கெஸ்டன்
சகோ.ஆரோக்கியராஜ்
சகோ.ராஜ்
சகோ.செங்குட்டுவன்
சகோதரி.ஜோன் ஆர்க் அசோக்குமார்
சகோதரி.மஞ்சுளா பாலமுருகன்
செல்வி.ஷெரின் பெனிட்டா ஸ்டாலின்
சகோதரி.விக்டோரியா ராஜன்
செல்வி.சாரா ஆல்வின்
செல்வன்.சாமுவேல் ஆல்வின்
செல்வி.அக்சாள் நிசி எபெனேசர்
சகோதரி.எப்சிபா ஸ்டீபன் ஜெயக்குமார்
சகோதரி.அபிகாயில் கிரேஸ் ஜஸ்டின்
சகோதரி.பிரிசில்லா செங்குட்டுவன்
சகோதரி.அபியா சுனில்

**பிறந்த நாட்கள் மற்றும் திருமண நாட்களை அனுசரிக்கிற உங்கள் எல்லோரையும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறோம். அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.**

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார் (மல்கியா 2:14)

திரு-திருமதி சுகந்தி - தம்புகமார் டென்னிஸ்
திருமதி-திரு சாம் ஆனந் - எப்சிபா பாமா
திருமதி-திரு சகாய டார்வின்- இவாஞ்சலின்
திருமதி-திரு E.சாமுவேல் - எமிமாள்
திருமதி-திரு.மணிராஜ் - ஏஞ்சலினா
திருமதி-திரு.வின்சென்ட் ஸ்வீட் - கீதா சகாயமேரி
திருமதி-திரு. ஜெஸ்சன் ஆல்பஸ் ஜேம்ஸ்- அனுஷா

திருமதி-திரு இயேசுரத்தினம் - மெர்சிலின் தயா
திருமதி-திரு.ஷர்மன் ராஜ் - ரீனா ரேச்சல்
திருமதி-திரு. தினேஷ் குமார் - அஸ்வினி
திருமதி-திரு கனீஷ் ஜோஸ்வா அமலன் - ஜோஸ்வா
திருமதி-திரு வேளாங்கன்னி - ரீனா

# 2025 – ஜனவரி மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 05/01/2025 | சகோ. சுபின் சிங் | சகோ. ஸ்டாலின் |
| 12/01/2025 | சகோ. சுகுமார் | சகோ. R. ஜெகன் |
| 19/01/2025 | சகோ. சிவக்குமார் | சகோ. தாமஸ் |
| 26/01/2025 | சகோ. எபினேசர் (MOH) | சகோ. M. கிறிஸ்டோபர் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 03/01/2025 | Bro. G.P.S. Robinson (Jesus Meets Ministries.Avadi ) | |
| 10/01/2025 | சகோ. டேவிட் | சகோ.கிறிஸ்டோபர்தேவராஜ் |
| 17/01/2025 | Fr.Dr.M.Bona ICC Chaplin (Holy Communion Service) | |
| 24/01/2025 | சகோ. சுகுமார் | சகோ. ஜெகநாதன் |
| 31/01/2025 | வேதாகம பள்ளி சிறுவர்கள் ஆராதனை | |

## ஆராதனை ஒழுங்குகள்

**சங்கிலி தொடர் ஜெபம்**

02/1/2025 மாலை 6:00 முதல் 03/1/2025 காலை 6:00 வரை

**9/1/2025 – அன்று முழு இரவு ஜெப ஆராதனை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணி வரை

**25/1/2025 – சகோதரிகள் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:00 மணி வரை

வேத வினா பகுதி – மாற்கு நற்செய்தி

**24/1/2025 – வாலிபர் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:00 மணி வரை

வேத வினா பகுதி – பின்னர் அறிவிக்கப்படும்

### சனிக்கிழமை

சிறுவர் வேதாகம பள்ளி

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 3:30 முதல் 5:30 ரை

### திங்கட்கிழமை

பெண்கள் ஐக்கிய ஜெப கூடுகை

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 5:30 முதல் 6:30 வரை

### செவ்வாய்கிழமை

குடும்ப ஆசீர்வாத ஜெப கூடுகை

இடம் – பரிசுத்த பவுல் ஆலயம் அஹமதி

நேரம் – மாலை 7:00 முதல் 8:30 வரை

### வியாழக்கிழமை

பாடல் பயிற்சி கூடுகை

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

# 2025 ஜனவரி மாதத்திற்கான வேத வினா!



**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**

1. எனக்கு சுகமுமில்லை இளைபாறுதலுமில்லை என்றது யார்?
2. என் சுக வாழ்வு ஒரு மேகத்தை போலக் கடந்து போயிற்று என்றது யார்?
3. மந்தைகளை காக்கும் நாய்களை பற்றி வாசிப்பதெங்கே?
4. சர்வ வல்லவராகிய தேவன் நீதியை புரட்டுவாரோ என்றவன் யார்?
5. காட்டு கழுதைக் குட்டிக்கு ஒப்பாக பிறந்திருக்கிறவன் யார்?
6. நான் பாவஞ்செய்தேனானால் உமக்கு நான் செய்ய வேண்டியது என்ன என்றது யார்?
7. என் ஆத்துமா என் ஜீவனை ஆராசிக்கிறது என்றது யார்?
8. தராசில் தன் சஞ்சலத்தை நிறுக்க விரும்பினவன்யார்?
9. நீரோட்டத்தை போல தீவிரமாய் போவான் யார்?
10 தன் சொந்த கண்களோடே உடன்படிக்கை பண்ணின பக்தன் யார்?
11. தேவனுடைய ரகசிய செயல் யார் கூடாரத்தின் மேல் இருந்தது?
12. நான் பேசினாலும் பேசாமலிருந்தாலும் என் துக்கம் ஆறாது என்றவன் யார்?
13.என் மீறுதலையும் என் பாவத்தையும் எனக்கு உணர்த்தும் என்று ஜெபித்தவன்
யார்?
14. ஒளியும் இருளாகும் தேசமெது?
15. விதைவையை வெறுமையாய் அனுப்பிவிட்டீர் என்று குறை கூறினது யார்?

விடைகளை வருகின்ற 20-01-2025 க்குள்
(WhatsApp #+91 8940523562) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில்
" யோபு "
அதிகாரங்களில் இருந்து பதிலை கண்டுபிடிக்கவும்.

**...தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – மத்தேயு 7:7**

## 2024 – டிசம்பர் மாத வேத வினாவுக்கு விடைகள்

1. பிலதெல்பியா (வெளி. 3:7-8)
2. பிசாசு / சாத்தான் (வெளி. 12:9)
3. தேவனுடைய மகிமையினாலும், அவருடைய வல்லமையினாலும். (வெளி. 15:8)
4. வெட்டுக்கிளி (வெளி. 9:7)
5. சகலவித இரத்தினங்களினாலும் (வெளி. 21:19-20)
6. உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக் குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள்யாவரும் அதை வணங்குவார்கள்.(வெளி. 13:8)
7. ஒருவனும் பாத்திரவானாகக் காணப்படாததினால் (வெளி. 5:4)
8. உடன்படிக்கையின் பெட்டி (வெளி. 11:19)
9. வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் (வெளி. 17:5)
10. இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் (வெளி. 7:4)
11. மரணமும் பாதாளமும் (வெளி. 20:14)
12. அது தேனைப்போல மதுரமாயிருந்தது (வெளி. 10:10)
13. சீயோன் மலை (வெளி. 14:1)
14. மரணம் / பாதாளம் (வெளி. 6:8)
15. தியத்தீரா சபையின் (வெளி. 2:18-19-20-21

## 2024– டிசம்பர் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

SIS. சுகந்தி தம்பு குமார்
SIS. பியூலா மெர்சி பால்
SIS. நித்யா ஜோன்ஸ்
SIS.ஜான்சி ராணி
SIS. சாந்தி
SIS. மரிய குளோரி தாஸ்
SIS.ஜீனா சதீஷ்குமார்
SIS. வனிதா
SIS. பத்மினி வர்க்கீஸ்

# சகோதரிகள் பகுதி

கர்த்தருக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே, இந்த இதழின் மூலமாய் புதிய வருடத்தில் உங்களை சந்திப்பதில் நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். நீங்களும் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பீர்கள் என்று நம்புகிறேன். சங்கீ–65:11 வருஷத்தை உம்முடைய நன்மையால் முடி சூட்டுகிறீர் உமது பாதைகள் நெய்யாய் பொழிகிது. கர்த்தர் நம்மை ஒவ்வொரு நாளையும், ஒவ்வொரு நிமிஷமும், ஒவ்வொரு மணிதுளிகளிலும் நன்மைகளினால் முடி சூட்டுகிறார். மற்றவர்கள் நம்மை பார்த்து கர்த்தர் நன்மைகளினால் இவர்களை நடத்துகிறார் என்பதை புரிந்து கொண்டு கர்த்தரை தெரிந்துக்கொள்வதற்காகவும் நாம் கடந்து போகிற பாதைகளில் கர்த்தர் ஆசீர்வாதத்தை வைத்திருக்கிறார். அதுமாத்திரமல்ல பாதைகளில் நெய்யாய் பொழியப்பண்ணுகிறார். நெய் என்பது அபிஷேகத்தைக்குறிக்கிறது. முடி சூட்டுகிறார் என்றால் கீரிடம் நம்முடைய

வேதாகமத்தில் ஆநேக கிரீடத்தைக்குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. நாம் அதில் ஒரு சில கிரீடத்தைப் பார்ப்போம்.

## 1. அபிஷேக தைலம் என்னும் கிரீடம்

லேவி–21:12 பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படாமலும் தன் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்கமலும் இருப்பானாக. அவனுடைய தேவனின் அபிஷேக தைலம் என்னும் கிரீடம் அவன் மேல் இருக்கிறதே. நான் கர்த்தர். யாருக்காக இந்த அபிஷேக தைலத்தை வைத்திருக்கிறார் என்றால் கர்த்தருடைய ஆலயத்திற்கு தவறாமல் வந்து அவரை பரிசுத்தத்தோடு ஆராதித்தும் துதித்தும் நம்முடைய ஆவி ஆத்துமா சரீரத்தை பரிசுத்த ஜீவ பலியாக கர்த்தருடைய பலி பீடத்தில் நம்மை தாழ்த்தி ஆராதிக்கும்போது இந்த அபிஷேக தைலம் என்ன செய்யும் என்றால், சங்கீ–23:5–ன் வசனத்தின்படி நம்முடைய சத்துருக்களுக்கு முன்பாக நமக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி நம்முடைய தலையை உயர்த்துகிறார். அதுமட்டுமல்ல நம்மை அபிஷேகத்து நம்முடைய வாழ்க்கையில் நன்மையும் கிருபையும் தொடரும் படியும் செய்கிறார்.

லூக்–10:33,24–ல் நல்ல சமாரியன் எப்படி காயங்களை கட்டுகிறானோ அதுபோல நம்மேல் இருக்கிற அபிஷேகம் அனேகருடைய காயங்களை கட்டுகிறது. நாம் பெற்ற அபிஷேகம் மற்றவர்களுக்கு பயன்படவேண்டும். அதை புதைத்து வைக்கக்கூடாது. ஒரு தாலந்தை பெற்றவன் புதைத்து வைத்தது போல புதைத்து வைக்கக்கூடாது. புதைத்து வைத்தால் ஒரு பிரயோஜனம் இல்லை. கர்த்தர் வேதத்தில் சொல்வது போல உள்ளவன் எவனோ அவனுக்கு கொடுக்கப்படும். இல்லாதவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும். நாமும் நம் தாலந்துகளை பயன்படுத்தும்போது, கர்த்தர் அபிஷேகத்தினால் நம்மை நிறைத்து அனேக பேருக்கு ஆசீர்வாதமாய் வைப்பார்.

## 2. நீதியின் கிரீடம்

2–தீமோத்–4:8 இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தருவார். எனக்கு

மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருள்வார். இந்த நீதியின் கிரீடம் யாருக்காக என்றால் நீதிமான்களுக்காக வைத்திருக்கிறார். தேவனுடையபிரசன்னத்தை விட்டு விலகாமல் இருப்பவர்களுக்காகவும்,பரிசுத்தத்தைக்காத்துக்கொள்கிறவர்களுக்காகவும் வைக்கப்பட்டிருக்கிறது.

நீதிமான்கள் மேல் அவருடைய கண்கள் நோக்கமாய் இருக்கிறது. நீதிமான்களின் விண்ணப்பத்திற்கு எப்போதும் அவருடைய செவிகள் திறந்திருக்கிறது. நமக்காக ஆயத்தமாய் வைத்திருக்கிற இந்த கிரீடத்தைப் பெற்றுக்கொள்ள அவருடைய பிரசன்னத்தை நாடும்போதும் வாஞ்சிக்கும்போதும் நமக்காக நீதியின் கிரீடத்தை தருவார்.

2-சாமு-6:11-14-ல் தாவீது எப்போதும் கர்த்தருடைய பிரசன்னத்தை நாடுகிறவராய் இருந்தார். கர்த்தருடைய பெட்டியை ஓபேத் ஏதோமின் வீட்டிலிருந்து வாஞ்சையோடு நகரத்திற்குள் கொண்டு வரவேண்டும் என்று விரும்பி தன்னுடைய இராஜ வஸ்திரத்தை கழற்றி போட்டு விட்டு சணல்நூல் ஏபோத்தைத் தரித்துக்கொண்டு அந்தப் பெட்டியை வாஞ்சையோடு கொண்டு வந்தான். நாமும் நம்முடைய position -யை விட்டு வெளியே வந்து தேவனை வாஞ்சையோடும், பிரசன்னத்தோடும் நாட வேண்டும். அப்பொழுது நமக்கும் நீதியின் கிரீடத்தை தந்தருள்வார்.

## 3. ஜீவ கிரீடம்

யாக்-1:12 சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான் அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தைப் பெறுவான். சோதனையை சகித்துக்கொள்ளும்போது உத்தமத்தை வெளிப்படுத்த வேண்டும். அந்த உத்தமத்தை யார் வெளிப்படுத்தினார் என்றால் யோபு செய்தார். எப்படியென்றால் யோபு-1:21-ல் கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்துக்கொண்டார். கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம் என்றான். என் தாயின் கருவிலிருந்து நிர்வாணியாய் வந்தேன். நிர்வாணியாய் அவ்விடத்திற்கு திரும்புவேன் என்றும் 1-கொரி-10:13-ல் மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. நம்முடைய திராணிக்கு மேலாக நம்மை சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடுக்காமல் சோதனையைத் தாங்கத்தக்கதாகவும், அதிலிருந்து தப்பித்துக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குகிறார். நமக்கு கொடுக்கப்பட்ட இந்த கொஞ்சக் காலத்திலேவாது நாம் இயேசு கிறிஸ்துவை விட்டு விலகாமலும் அவரைக் கெட்டியாய் பிடித்துக்கொள்ளும்போது மேலே கூறப்பட்ட அந்த ஜீவ கிரீடத்தை தந்து நம்மை ஆசீர்வதிக்கிறார், நீதியின் கரத்தினால் நம்மை முடி சூட்டுகிறவராய் இருக்கிறார். கர்த்தர் இந்த புதிய ஆண்டில் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து வழி நடத்துவாராக ஆமென்.

கர்த்தரின் பணியில்
உங்கள் அன்பு சகோதரி,
செலின் டேவிட்

## வாலிபர் பகுதி

# நம் நற்செய்தியின் தளங்கள் எங்கே?

"சீயோன் என்னும் சமவெளி, உயர்ந்த பர்வதம் என்னும் மலைப்பகுதி எருசலேம் போன்ற பட்டணங்கள்"(ஏசாயா 40-9)

நாட்டுபுற ஊழியம், மலைபுற ஊழியம், நகர்புற ஊழியம், என்று உலகம் முழுவதும் சுவிசேஷம் அறிவிக்கபட வேண்டும் என்று ஏசாயா விரும்புகிறார்.

## நற்செய்தியை எப்படி சொல்ல வேண்டும்?

### 1. உரத்த சத்தமிட்டு சொல்லு

எபி 10:23- அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம். வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. நாமும் உரக்க சத்தமிட்டுக் அறிக்கையிட வேண்டும்.

### 2. பயப்படாமல் சத்தமிட்டு சொல்லு

வெளி 15:4- கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்? தேவரீர் ஒருவரே பரிசுத்தர், எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு முன்பாகத் தொழுதுகொள்வார்கள், உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின. நாமும். அவர் நாமத்தை மகிமை படுத்த பயப்படகூடாது.


### 3. இதோ உன் தேவன் என்று சத்தமிட்டு சொல்லு

வெளி 7:10- அவர்கள் மகா சத்தமிட்டு இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்.

இலவசமாய் பெற்றுக்கொண்ட நன்மைகளை இலவசமாய் கொடுங்கள்.

வாலிபம் இயேசுவுக்கே.

# Kids Corner


MANKIND
GOD
Christ Paid the Penalty
Romans 5:8
I Peter 3:18
All Have Sinned
Romans 3:23
Isaiah 53:6
Must Receive Christ
John 1:12
Revelation 3:20
Sin's Penalty
Romans 6:23
Hebrews 9:27
Assurance of Salvation
I John 5:13
John 5:24
Salvation Not by Works
Ephesians 2:8-9
Titus 3:5
DEATH
LIFE

# Names of God

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| N | R | U | E | L | O | H | I | M | F | S | V | V | A |
| A | R | D | E | L | N | U | R | Y | S | C | C | B | Y |
| B | I | T | J | I | L | J | L | A | Y | Z | R | L | F |
| S | A | J | I | N | Y | Z | W | K | A | W | A | Q | E |
| Y | D | E | G | G | X | A | A | G | B | H | P | A | L |
| U | O | L | I | A | W | C | W | O | Z | I | H | F | O |
| S | N | S | T | D | T | O | A | E | W | C | A | T | L |
| Q | A | H | E | H | S | X | M | M | H | T | E | F | A |
| N | I | A | I | L | T | B | C | J | W | M | R | U | M |
| H | K | D | J | O | E | E | P | G | Q | E | G | V | X |
| P | N | D | I | V | V | L | G | W | I | G | Z | A | L |
| A | U | A | R | Y | J | I | Y | F | L | L | V | E | V |
| V | J | I | E | Q | J | E | H | O | V | A | H | G | R |
| O | F | E | H | T | Q | J | G | R | N | S | C | P | H |

ELOHIM
YAWEH
JEHOVA
ADONAI

EL SHADDAI
EL ELYON
EL OLAM

JEHOVA:
- RAAH
- RAPHA
- JIREH

# கடந்த மாத நிகழ்வுகளில் உங்கள் பார்வைக்கு சில






















# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

**முதன்மை ஊழியர் : சகோ. S.ஸ்டாலின்**
Ph.66021072 - 96760452

**செயலாளர் : சகோ.S.சுகுமார்**
Ph.99837646

**பொருளாளர் : சகோ.S.சிவ குமார்**
Ph.97224276

**பெண்கள் ஐக்கிய தலைவி: சகோதரி. செலின் டேவிட்**
Ph.65967170 - 99368775

**வாலிப ஐக்கிய தலைவர் : சகோ.சுபின் சிங்**
Ph.65197164-65772762


Follow us Social Media Youtube & Facebook - ATC TAMIL

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Website Address - ahmaditamilchurch.com




தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.


Church Postel Address
Your name,,
Po. Box No : 46795.
Fahaheel,64018, Kuwait.



Private Circulation only